JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw-5- Witness
for Prosecution

CC No. 76/2025 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW. 5 தங்கவேல் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 13.07.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் பூணாச்சியில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. சுமார் 1 ½ வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் எங்கள் ஊரைச் சார்ந்தவர்கள் கூட்டமாக ஓடினார்கள். அவர்களிடம் என்னவென்று விசாரித்த பொழுது, அவர்கள் ஆஜர் எதிரி பிரகாஷ் சாட்சி ரோகிணியின் வீட்டில் இருந்து பொருட்களை திருடி கொண்டு செல்வதாகவும், அவரை துரத்தி செல்வதாகவும் கூறினார்கள். நான் பிரகாஷை நேரில் பார்க்கவில்லை. அங்கு இருந்தவர்கள் மூலம் தகவல் தெரிந்து கொண்டேன். வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 25.01.2025 தேதியன்று மாலை சுமார் 05.00 மணியளவில் நான் ரோகிணியின் வீட்டின் வழியாக நடந்து சென்று போய்க் கொண்டிருந்ததாகவும், அப்போது பிரகாஷ் ரோகிணியின் வீட்டில் இருந்து வேகமாக வெளியே ஓடி வந்ததாகவும், ரோகிணியின் சித்தி சரசால் சத்தம் போட்டதாகவும், பிரகாஷ் நிற்காமல் வேகமாக ஓடிவிட்டதாகவும், அங்கு ரோகினியை காணவில்லை என்றும், சரசாவிடம் விசாரித்ததாகவும், அப்போது சரசால் ரோகிணியின் வீட்டிற்குள் சென்று பார்த்துவிட்டு பீரோவிற்குள் இருந்த ரோகினையின்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 14:47:54 +0530

நகைகளை காணவில்லை என்று சரசால் சத்தமாக ரோகிணியிடம் ஃபோனில் பேசிக் கொண்டிருந்ததாகவும், அதனை நான் கேட்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.07.13 14:48:04 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**